1969 மார்ச் 14]

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்திலே நிதித் துறையிலே மட்டும்தான் இந்த முறை அமல்படுத்தப்படுகிறது, அதன்மூலம் ஒரு ஆண்டுக்கு ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ரூபாய் மிச்சப்படுகிறது என்று சொன்னார்கள். மற்றத் துறைகளிலும் எப்போது அமல்படுத்தப்படும்? தலைமைச்செயலகத்தைத் தவிர வேறு துறைகளிலும் எப்போது அமல் படுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நிதித் துறையைப் பொறுத்தவரை இந்தச் சீரமைப்பு வசதியாக இருக்கிறது. நிதித் துறையில் கோப்புகளில் கருத்து அறிவிப்பு செய்வது மாத்திரம்தான் அவர்கள் வேலையாக இருக்கிறது. ஆனால் வேறு பல துறைகளில் பல பேர்கள் கைக்குப் போக வேண்டிய நிலைமை இருக்கிறது. மற்றத் துறைகளில் அந்தச் சங்கடம் இருக்கிற காரணத்தால் எல்லாத் துறைகளுக்கும் அதை விரிவுபடுத்த இயலாது.

Minister's visit to Mauritius Island.

* 285 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether the Hon. the Minister for Health and Harijan Welfare paid a visit to Mauritius Island; and

(*b*) if so, when and for what purpose?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) மோரிஷஸ் தீவின் மக்களின் அழைப்பிற்கிணங்க மாண்புமிகு ஹரிஜனநல செய்தித்துறை அமைச்சர் 1968 ஜூனில் அத்தீவிற்கு கலாச்சார முறையில் சென்றுவந்தார்.

திரு. கே. விநாயகம்: அப்படி அழைப்பின்பேரிலே போன அமைச்சர் அவர்கள் அங்கிருந்து எதைக் கற்றுக்கொண்டு வந்தார்கள்? எந்த அனுபவத்தை இங்கே கொண்டு வந்தார்கள்? அந்த முறைகளை எல்லாம் செயல்படுத்துவதற்கு, அவைகள் நல்லவைகளாக இருந்தால், முதல் அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எதையும் கற்றுக்கொண்டு வர வில்லை. ஆனால் அவர்கள்தான் தமிழ் கற்றுக்கொள்ளவேண்டும், அதற்காக இங்கிருந்து ஆள் வேண்டுமென்று சொன்னதாகக் கேள்வி.

Students Anti-Hindi Agitation Council.

* 286 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that the Students Anti-Hindi Agitation Council of Madurai had decided to disregard the National Anthem and National Solidarity Pledge?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, அதன் மீது அரசாங்கம் எடுத்துக்கொண்ட முடிவு என்ன? தேசிய கீதத்தை அவமதிப்பவர்கள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தேசிய கீதம் பாட மறுத்தவர்களுக்கும் அதைத் தடுப்பவர்களுக்கும், உறுதிமொழி எடுக்காதவர்களுக்கும், தண்டனைக் கொடுப்பதற்குச் மத்திய சட்டத்திலோ, மாநில சட்டத்